Registerd as a Newspaper in Ceylon

★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

நாவலர்கோட்டு வீதி. 45
போன் 889

National Tamil Daily

மலர் 10
இதழ் 178
தேசிய தினசரி

சாந்தி ஆண்டு ஆடி 23 ஜூ அவ் 12 புதன்கிழமை (7-8-68)




# வழிபடச் செல்பவரை தடை செய்வது குற்றம்

## கைதுசெய்யும் அதிகாரம் பொலிசாருக்கு உண்டு

## அட்டோர்னி ஜெனரல் கருத்து

### ஐ. ஜி. பி. விளக்கம்

கொழும்பு, புதன்

ஆலயங்களில் வழிபடச் செல்பவர்களைத் தொண்டர்கள் தடைசெய்வது தண்டனைக்குரிய குற்றம். அப்படித் தடைசெய்பவர்களைக் கைதுசெய்யும் அதிகாரம் பொலிசாருக்குண்டு' என்று அட்டோர்னி ஜெனரல் தெரிவித்திருக்கிறார்.

இத்தகவலை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜயபகுணவர்த்தன இன்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆலயப் பிரவேச சம்பவங்களைப் பற்றி குறிப்பிடுகையிலேயே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அட்டோர்னி ஜெனரல் விடுத்துள்ள அறிவிப்பை வெளியிட்டார்.

ஆலயங்களில் வழிபடச் செல்பவர்களை தொண்டர்கள் தடைசெய்வது குற்றமாகும், அவர்களைப் பொலிசார் கைதுசெய்யவும் அதிகாரமுண்டு என்று அட்டோர்னி ஜெனரல் தெரிவித்துள்ளதாக ஐ ஜி பி. தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கோவிலில் நடந்த சம்பவங்கள் போன்று இனிமேலும் நடைபெற இடமளிக்கப்படமாட்டாது என்றும் ஹரிஜனங்களைக் கோவிலில் சென்று வழிபடுவதைத் தடுப்பவர்களைப் பொலிசார் கைது செய்வார்கள் எனவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிருபர்களிடம் மேலும் கூறினார்.

## மாவை கைகலப்பு:

## 20ந் திகதி வழக்கு தாக்கல்

குரும்பசிட்டி, செவ்

மாவிட்டபுரம், கந்தசாமி கோவிலில் ஆலயத் தொண்டர்களுக்கும் ஹரிஜனர்களுக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பு சம்பந்தமாக பயங்கரமான ஆயுதங்கள் வைத்திருந்து, சட்ட விரோத கூட்டம் கூடி கலகம் விளைவித்ததாக நால்வருக்கு எதிராக காங்கேசன்துறை பொலிஸார் இம்மாதம் 20-ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த வி. சாந்தலிங்கம், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கே. முருகேசு, எஸ். அப்புக்குட்டி, மல்லாகத்தைச் சேர்ந்த கே. தர்மலிங்கம் ஆகிய நால்வர் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்படும். இவர்களை ஏற்கனவே தலா 1000 ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி எம். சண்முகலிங்கம் அனுமதித்திருந்தார்.

மீண்டும் 4 சந்தேக நபர்களையும் இம்மாதம் 20ம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சந்தேக நபர்களைப்பற்றிய அறிக்கையைப் பொலிஸார் நீதிபதியிடம் சமர்ப்பித்து வழக்குத் தாக்கல் செய்ய தவணை கோரியுள்ளனர்.

சந்தேக நபர்கள் சார்பில் வழக்கறிஞர் வி. சுந்தரலிங்கம் புரக்டர் உலகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## 'மக்கள் விரும்பாததை அரசாங்கம் தீர்மானிக்கமுடியாது'

அளவெட்டி, செவ்.

சமயத்திற்கு சட்டம் இயற்ற ஆட்சி மன்றத்திற்கோ கவர்னர் ஜெனரலுக்கோ எதுவித அதிகாரமுமில்லை. ஆலய நிர்வாகம் திருவிழா முதலியனவற்றிற்கும் சமய சட்டங்களும் சம்பிரதாய வழமை முறைகளும் தான் செல்லுபடியானவை. இவற்றை அனுசரித்து பல வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்டுள்ளன. ஆலய நிர்வாகத்திலோ அல்லது நடைமுறை விதிகளையோ மாற்றும் அதிகாரம் அவ்வாலயத்தில் வழிபடும் திருவிழா உபயகாரர், திருப்பணிகாரர், அயலவர், முகாமையாளர்கள் தீர்மானிக்க முடியும் ஆனால் மக்கள் விரும்பாததை அரசாங்கம் தீர்மானிக்க முடியாது.

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தொண்டர் சபை விசேட கூட்டத்தில் உரையாற்றிய வழக்கறிஞர் சி. பொன்னம்பலம் கூறினார்.

இக் கூட்டத்தில் மு. நடேசலிங்கம், சி. சோமசுந்தரம், சி. கதிர்காமசுந்தரம். த. சிவலிங்கம், எஸ். சுந்தையா, சி. சுந்தரமூர்த்தி ஐயர், எம். பொன்னுத்துரை, க. கதிரைமலையான் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

பின்வருவோர் தொண்டர் சபை புதுவருட உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: சு. துரைச்சாமிக் குருக்கள், து. சண்முகநாதக் குருக்கள், தலைவர்: சி. நாகலிங்கம், உப-தலைவர்கள்: மு. நடேசலிங்கம், க. மாப்பாணர், காரியதரிசி: பூ. கந்தசாமி, தனாதிகாரி: க. கதிரைமலையான்.

15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# ஆலயப்பிரவேசப் பிரச்னைக்கு தேர்தல் மூலம் தீர்ப்பு

## வடபகுதி எம். பி.க்கள் பதவி துறக்கவேண்டுமாம்

### மாவை கூட்டத்தில் தீர்மானம்

அளவெட்டி, செவ்வாய்

"போர்த்துக்கீசர் ஒல்லாந்தர்களின் கொடுங்கோலாட்சியின் போது சைவக் கோயில்கள் இடிக்கப்பட்டனவேனும் சமய அனுட்டானங்கள் மக்களிடையே பேணப்பட்டன. 450 வருட கால அந்நிய ஆட்சியில் அனுபவித்த மனப்புண்களை ஆற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எங்கள் வணக்க சுதந்திரத்தை அழிக்காது வைதிக சைவர்களாகிய எங்களுக்கும் சில ஆலயங்களையேனும் மாசுபடுத்தாது விட்டு வைக்கவேண்டும்"

(6-ம் பக்கம் பார்க்க)

வேலையில்லாப் பிரச்னை தீர

## அரசாங்கத்துக்கு வாலிபர் ஒத்துழைப்பளிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"படித்த வாலிபர்களுக்கிடையே இன்று ஏற்பட்டிருக்கும் வேலையின்மை பிரச்னையை நீக்கத் தேசிய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு வாலிபர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். தொகுதிகள் தோறும் இப்படியான இளம் விவசாயிகள் கழகங்களையும், மாதர் முன்னேற்றச் சங்கங்களையும் அமைப்பதினால் அரசாங்கத்தின் திட்டம் ஓரளவிற்காவது நிறைவேறமுடியும்."

இவ்வாறு யாழ். மாவட்ட சமூக சேவைப் பகுதி உதவி டைரக்டரான திரு.

(5ம் பக்கம் பார்க்க)

## நாளை தமிழரசு வாலிப முன்னணி கூடுகிறது

யாழ்ப்பாணம், புதன்

நாளை தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணிச் செயற்குழுக்கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. இக் கூட்டத்தில் தனித்தமிழ்நாடு கோரிக்கை பற்றியும், நாவற்குழியில் சிங்களக் குடியேற்றத் திட்டம் நிறுவப்படவிருப்பது பற்றியும் ஆராயவிருப்பதாகத் தெரிகின்றது.

இக் கூட்டத்திற்கு தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணித் தலைவர் திரு. ...

இராசதுரை தலைமைதாங்குவார்.

# கதிர்காம தீ மிதிப்பில் 29 பேருக்கு காயம்

கதிர்காமம், செவ்வாய்

கதிர்காம க்ஷேத்திரத்தில் நேற்று நடந்த தீ மிதிப்பில் 29 பேர் காயத்துக்குள்ளானார்கள். இவர்களில் பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பக்திப் பரவசத்தோடு நேற்று நடந்த இத் தீ மிதிப்பில் 600க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பக்தர்கள் வெள்ளம் கதிர்காமத்தில் பெருக்கெடுத்த வண்ணமிருக்கிறது. எல்லா மடங்களிலும் பக்தர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2வது வாரம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

கடைசி வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
நடித்த
நிர்மலா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M
THE FEARLESS
VAMPIRE KILLERS
(Adults)

சினாமா (கொழும்பு) — மைலன் (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) — விஜயா (மட்டுநகர்) — ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த




ஸ்ரீ விநாயகா
பிக்சர்ஸ்
நான்

கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜந்திமாலா
நடித்த
சங்கம்


## திருமதி பொன்னையா செல்லமுத்து

### நன்றி

எமது தாயார் 10-7-68-ல் சிவபதமடைந்த போது வருகை தந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் உதவிகள் செய்தும் எம் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எம் நன்றி.

### அறிவித்தல்

அன்னாரின் அந்தியேஷ்டி கிரியைகள் இன்று [7-8-68] நடைபெறும்.

### அழைப்பு

9-8-68 வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளும்படி நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

பொ. சுப்பையா,
பொ. வீரசிங்கம்,
பொ. இலங்கநாதன்
திருமதி சரஸ்வதி
ஆறுமுகம்.

அம்பாளகம்,
மருதனார்மடம். 912

## போட்டியின்றி தெரிவு

குரும்பசிட்டி, செவ்

மல்லாகம் கிராமசபையின் 10 ம் வட்டார அங்கத்தவராக திரு.வ. பொன்னம்பலம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ் வட்டாரத்திற்கான இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி திரு எஸ். கந்தசாமி முன்னிலையில் கிராம சபை அலுவலகத்தில் வைத்து இன்று திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

திரு. வ. பொன்னம்பலம் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி மத்திய குழு உறுப்பினரும் அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவருமாவார். இவர் முன்னரும் 9 வருடகாலமாக இக்கிராம சபையின் அங்கத்தவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லட்சம் மக்கள் கலந்துகொண்ட காங்கிரஸின் மௌன ஊர்வலம்

சென்னை, ஆக. 6

அண்மையில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் ஊர்வலமொன்றில் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக நேற்று முன்தினம் சென்னையில் காங்கிரஸ் கட்சி ஒரு மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தியது. இந்த ஊர்வலத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் கலந்து கொண்டார்.

தமிழகக் காங்கிரஸ் தலைவர் திரு. பி. சுப்பிரமணியம், முன்னாள் தலைவர் திரு. காமராஜ், முன்னாள் தமிழக முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் ஆகிய முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் ஊர்வலத்தில் சென்றனர்.

பின்னர் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## மருந்துத் தட்டுப்பாடு

புலோலி, செவ்.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சில மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

## புதிய நிர்வாகிகள்

மல்லாவி, செவ்வாய்

வவனிக்குளம் சிவாலய திருப்பணிச்சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் துணுக்காய் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து தலைமையின்கீழ் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. சோமசுந்தரம், உபதலைவர்: திரு சி. சபாரத்தினம், இணைக் காரியதரிசிகள்- திருசெ.மயில்வாகனம், திரு. கி. மார்க்கண்டு, பொருளாளர்: திரு. வ.வேலுப்பிள்ளை.

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு நூல் சுற்றுவதற்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் தொடர்பு கொள்ளவும். K. M. சின்னத்துரை 'ஜெயமகால்' மெம்மோரியல் லேன், மானிப்பாய். 1298

நெசவு தெரிந்த பிள்ளைகளும், நூல் சுற்றக்கூடிய பிள்ளைகளும் தேவை. தங்குமிட வசதியுமுண்டு. 'ஆனந்தி நெசவகம்' 33 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை 1298

## இன்று ரதோற்சவம்

உரும்பிராய், புதன்

உரும்பராய் கற்பக ஆலய ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. வசந்த மண்டப பூசையை அடுத்து காலை பத்துமணிக்கு விநாயகப் பெருமான் தேரில் பவனி வருவார். அடுத்த நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

### லட்சார்ச்சனை

அளவெட்டி, செவ்வாய்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில் 3வது ஆண்டு இலட்சார்ச்சனை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த அர்ச்சனை தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்று இறுதியில் சங்காபிஷேகம் நடைபெறும்.

### உற்சவம்

உடுவில், செவ்வாய்

கோண்டாவில் இணுவிலில் பிரசித்தி பெற்ற காரைக்கால் சிவன்கோவில் வருடாந்த உற்சவம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இம் மாதம் 7ம் 8ம் திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் பூர்த்தியாகும்.



இன்று முதல் மகத்தான ஆரம்பம்!

மனோஹரா (யாழ்ப்பாணம்) — செயின்ஸ்தான் (கொழும்பு)

தினசரி 2-30, 6-30, 9-30 மணி. விசேட தினங்களில் காலை 10-30 மணி

தென்னகத்து ஜேம்ஸ் பொண்ட் ஜெய்சங்கர் — ஆடலழகி எல். விஜயலட்சுமி

இசைப்பேரறிஞர்
கே. பி. சுந்தராம்பாள்
நாகேஷ் — அசோகன் — தங்கவேலு — ஜி. சகுந்தலா
நடித்த



உயிர் மேல் ஆசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. நா. பந்தோபஸ்து சபையில்

# இஸ்ரேல்-ஜோர்தான் பிரதிநிதிகள் பரஸ்பரம் குற்றச்சாட்டு

## ரஷ்யாவும் அமெரிக்காவும் கலந்து கொண்டன

நியூயோர்க், ஆக. 6

ஜோர்தான் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இஸ்ரேல் விமானக் குண்டுவீச்சுச் சம்பவம் பற்றிய இஸ்ரேல், ஜோர்தான் இரு நாடுகளினதும் புகார்களையும் விவாதிக்க, ஐ. நா. பந்தோபஸ்து சபை நேற்றுக் கூடியது.

**தற்பாதுகாப்பு**

இஸ்ரேல் பிரதிநிதி பேசுகையில், இஸ்ரேல் குண்டு வீச்சு ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கையே என்று கூறினார்.

ஜோர்தான் பகுதியில் நிறுவப்பட்டுள்ள அரபுக் கொரில்லா ஸ்தாபனத்தின் தலைமை நிலையம் மீதே இஸ்ரேல் குண்டு வீசியதாக அவர் தெரிவித்தார். இஸ்ரேல் மீது கொரில்லாப் படையினர் அடிக்கடி நடத்தும் தாக்குதல்களைத் தடுக்கும் முகமாகவே இக்குண்டுவீச்சு நடத்தப்பட்டதாக அவர் விளக்கினார்.

**'தடை நடவடிக்கை வேண்டும்'**

ஜோர்தான் பிரதிநிதி, இஸ்ரேலுக்கு எதிராக பந்தோபஸ்து சபை, தடை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஆக்கிரமிப்பு நோக்குடனேயே இஸ்ரேல் இக்குண்டு வீச்சை நடத்தியுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார். குண்டுவீச்சில் 30 பேர் உயிரிழந்ததாக அவர் குறிப்பிட்டார். ஜோர்தான் கிழக்குப் பகுதியிலுள்ள விவசாய நிலப் பகுதியை அழிப்பதே இஸ்ரேலின் திட்டம் என்றார் அவர்.

**ரஷ்யப் பிரதிநிதி குற்றச்சாட்டு**

சோவியத் பிரதிநிதி திரு. மாலிக் பேசுகையில், குண்டு வீச்சுச் சம்பவத்தையிட்டு சபை இஸ்ரேலுக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்று கூறினார்.

மேற்கு ஆசியாவில், அமைதியை நிலைநாட்டும் முகமாக, தான் கைப்பற்றிய அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புகளைத் திருப்பிப் பெறவேண்டுமெனவும் அவர் வேண்டிக்கொண்டார்.

**அமெரிக்க மறுப்பு**

அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஜோர்ஜ் போல், அண்மையில் இஸ்ரேல் சென்றுவிட்டுத் திரும்பிய சில நாட்களில் தான் இஸ்ரேலிய குண்டுவீச்சு நடைபெற்றுள்ளது என்று ரஷ்யப் பிரதிநிதி சுட்டிக்காட்டியதும், அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஜோர்ஜ் போல் உடன் எழுந்து அதை மறுத்தார்.

சோவியத் யூனியன் பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதாகத் திரு. ஜோர்ஜ் போல் கூறினார்.

இஸ்ரேலின் தாக்குதல்களையோ அல்லது கொரில்லா நடவடிக்கைகளையோ இரண்டையுமே அமெரிக்கா ஆதரிக்கவில்லையென அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலும், அரபு நாடுகளும் ஐ. நா. மூலம் தமது தகராறைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே அமெரிக்காவின் விருப்பம் என்றார் அவர்.

---

லண்டனில்

## மிகப் பெரிய ரஷ்ய பொருட்காட்சி

லண்டன், ஆக. 6

ரஷ்யாவுக்கு வெளியே இதுவரை நடத்தப்படாத அளவில், பெரிய பொருட்காட்சியொன்றை சோவியத் யூனியன், விரைவில் லண்டனில் நடத்தவிருக்கிறது.

காலஞ்சென்ற விண்வெளி வீரர் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்ற விண்கலம் உள்ளிட்ட பதின்மூன்று விண்கலங்கள் இப்பொருட்காட்சியில் வைக்கப்படும்.

பிரிட்டனும், பிரான்சும் இணைந்து தயாரிக்கும் சூப்பர்ஸோனிக் ஜெட் விமான 'கொன்கோர்ட்'க்குச் சவாலாக ரஷ்யா தயாரித்து வரும் மிகப்பெரிய சூப்பர் ஸோனிக் விமானத்தின் மாதிரியும் இப்பொருட்காட்சியில் இடம்பெறும்.

பலவித நவீன ரஷ்ய மோஸ்தர் உடைகளும் காட்சிக்கு வைக்கப்படும்.

---

அமெரிக்க

## ஜனாதிபதி தேர்தலில் றெனால்ட் ரீகனும் போட்டி

மியாமி, ஆக. 6

அமெரிக்க நகரான மியாமியில் நேற்று நடைபெற்ற குடியரசுக் கட்சியின் மகாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நிற்பதற்குத் தமது கட்சியின் அபேட்சகத்தைத் தாம் கோரப் போவதாகக் கலிபோர்னியா மேயர் திரு. றெனால்ட் ரீகன் அறிவித்துள்ளார்.

---

## அமெரிக்க அணுகுண்டுவீச்சின் 23-வது நினைவு தினம்

### ஹிரோஷிமாவில் மக்கள் மௌன ஊர்வலம்

டோக்கியோ, ஆக. 6

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது, அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான ஜப்பானிய நகரான ஹிரோஷிமாவில், நேற்று குண்டு வீச்சு நடந்த தினத்தின் 23-வது ஆண்டு தினம் அனுசரிக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள், நகரிலுள்ள சமாதானப் பூங்காவுக்கு மௌன ஊர்வலத்தில் சென்றனர். நகரின் மேயர், ஜப்பானியப் பிரதமர் திரு. ஸட்டோ, பாப்பரசர் போல், மற்றும் உலகத் தலைவர்கள் அனுப்பியிருந்த செய்திகளை மக்களிடம் வாசித்துக்காட்டினார்.

குண்டு போடப்பட்ட சரியான நேரத்தில், மக்கள் ஒரு நிமிட நேர மௌனம் அனுஷ்டித்துப் பிரார்த்தனை செய்தனர்.

ஹிரோஷிமா நகர், திரும்பவும் நிர்மாணிக்கப்பட்டு இப்போது புத்தம் புதிய நகராகக் காட்சியளிக்கிறது.

---

## பக்தூன் கிராமங்கள் மீது பாகிஸ்தான் குண்டுவீச்சு

காபூல், ஆக. 6

பாகிஸ்தானிய விமானங்கள், பலுச்சிஸ்தானிலுள்ள பக்தூன் கிராமங்கள் மூன்றின் மீது, கடந்த 3 நாட்களாகத் தொடர்ந்து நடத்திய குண்டு வீச்சினால், பலத்த ஆட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்பட்டதாகக் காபூல் ரேடியோ அறிவித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து பிரிந்து, தனி ராஜ்யமான 'பாக்தூனிஸ்தான்' அமைக்கப் போராடி வரும் பாக்தூன் மக்களின் சுதந்திரப் போராட்டம் அண்மையில் தீவிரமடைந்துள்ளதாகவும் காபூல் ரேடியோ தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான், 500 பாக்தூன் தேசியவாதிகளையும் பிடித்துச் சிறையிலடைத்துள்ளதாக அது மேலும் கூறியுள்ளது.

---

மணிலா பூகம்பம்

## இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட 9 வயது குழந்தை

### மூன்று தினங்களுக்குப்பின்

மணிலா, ஆக. 6

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் ஏற்பட்ட கடும் பூகம்பத்தில், மூன்று தினங்களுக்குமுன், இடிந்து விழுந்த 5 மாடிக்கட்டிடமொன்றின் இடிபாடுகளிலிருந்து 9 வயதுக் குழந்தையொன்றை மீட்புவேலையாட்கள் நேற்று மீட்டனர்.

இப்பூகம்பத்தின் விளைவாக இடிந்து விழுந்த இந்த 5 மாடிக் கட்டிடத்தின்கீழ் அகப்பட்டு இறந்தவர்களின் தொகை 200 ஆகும். இன்னும் 100 பேர், இடிபாடு

[8ம் பக்கம் பார்க்க]

---

## பத்திரிகை ஊழியர் ஊர்வலம்

புதுடில்லி, ஆக. 6

புதுடில்லியில் பத்திரிகையாளர்களும், பத்திரிகையாளர்களல்லாத பத்திரிகை ஊழியர்களும் நேற்றுத் தமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். சுமார் 2000 பேர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பின்னர் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

---

## செக். பத்திரிகைகள் மீது ஓரளவு கட்டுப்பாடு

### ரஷ்யாவின் வெற்றி?

பிராக், ஆக. 6

செக்கோஸ்லோவக்கியப் பத்திரிகைகள், பிற கம்யூனிஸ்ட் நாட்டுச் செய்திகளை வெளியிடும் போது, அந்தந்த நாட்டுத் தேசிய அம்சங்களையும், பொதுவாகக் கம்யூனிஸ ஒற்றுமையையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமெனச் செக். தலைவர் ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செக்கோஸ்லோவாக்கியாவின் புதிய சோஷலிஸத் தாராளக் கொள்கையை ஏற்றுக்கொண்டதற்குப் பதிலாக, பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் சலுகையை, பிராட்டிஸ்லாவாப் பேச்சுவார்த்தைகளில், ரஷ்யா, செக். தலைவர்களிடமிருந்து பெற்றிருக்கலாம் என்ற ஊகத்தைச் செக் தலைவரின் இந்த வேண்டுகோள் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

செக். பிரதமர் நேற்றுப் பேசுகையில், புதிய அரசியல் பாதையிலிருந்து செக்கோஸ்லோவக்கியா ஒருபோதும் விலகமாட்டாது என்பதை மீண்டும் வலியுறுத்தினார். அதே நேரத்தில் மற்றக் கம்யூனிஸ்ட் நாடுகளுடன் நெருங்கிய உறவுகளை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் அவர் எடுத்துக் கூறினார்.

---

சென்னையில்

## பொலிஸ் தடியடி

சென்னை, ஆக. 6

சென்னைக்கருகேயுள்ள ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்த தொழிலாளர் மீது, பொலிஸார் நேற்றுத் தடியடிப்பிரயோகம் செய்ததன் விளைவாக 14 பேர் காயமுற்றனர்.

வேலை நிறுத்தம்செய்யும் தொழிலாளர்கள், பொலிஸார் மீது கற்களை வீசியதாலேயே தாம் தடியடிப் பிரயோகம் செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர், கல்வீச்சில், சில பொலிஸாருக்கும் காயமேற்பட்டது.

---

பிரிட்டிஷ்

## எதிர்க்கட்சித் தலைவர் ஹீத் ஆஸ்திரேலியா சென்றார்

லண்டன், ஆக. 6

பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எட்வார்ட் ஹீத், ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவர், ஆஸ்திரேலியாவில் இருவாரங்கள் தங்கியிருப்பார்.

அங்கு தங்கியிருக்கையில், ஆஸ்திரேலியப்பிரதமர் கோர்ட்டனை அவர் சந்தித்துப் பேசுவார்.

---

# நைஜீரிய சமாதானத்துக்கு எதியோப்பிய மன்னர் கோரிக்கை

## இருதரப்பினருக்கும் வேண்டுகோள்

அடிஸ் அபாபா, ஆக.

எதியோப்பியத் தலைநகரான அடிஸ் அபாபாவில் நேற்று சமஷ்டி நைஜீரியாவுக்கு, பிரிவினை பியாவ்ராவுக்குமிடையேயான முழு அளவிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

**மன்னரின் வேண்டுகோள்**

பேச்சுவார்த்தைகளை எதியோப்பிய மன்னர் ஹெயிலி செலாஸி ஆரம்பித்து வைத்தார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமைச் சபையே ஒழுங்குசெய்திருந்த போதும், நைஜீரிய உள்நாட்டுப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் பொறுப்பும், கடமையும் சமஷ்டி நைஜீரியாவையும், பியாப்ராவையும் சார்ந்ததாக மன்னர் செலாஸி ...தேசியவாதிகளிலும் நோக்கத்தைச் சழிக்கவேண்டாமென அவர் இருசாராரையும் கேட்டுக்கொண்டார். உண்மையான சமாதானத்துக்கு முயற்சிக்குமாறு அவர் கோரினார். ஆபிரிக்க ஒற்றுமையைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

முன்னதாக, சமஷ்டி நைஜீரிய, பியாப்ராப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர்கள் இருவரும் மன்னரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினர்.

**சமஷ்டித் தலைவர் கருத்து**

நேற்று ஆரம்பமான பேச்சுவார்த்தைகளின்போது பேசிய சமஷ்டி நைஜீரியத் தலைவர், நைஜீரியாவில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாக அமையலாமென்று கூறினார். பியாவ்ரா, தனது பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்டுச் சமஷ்டியில் மீண்டும் சேருவதே போரை நிறுத்துவதற்கு ஒரே வழியென்றும் அவர் வலியுறுத்தினார்.

**பியாவ்ராவின் உறுதி**

பியாவ்ராத் தலைவர் கேர்ணல் ஒஜுக்வு பேசுகையில் பியாவ்ரா சுதந்திரமாக வாழவே விரும்புவதாகவும் அது தனது பிரிவினைக் கொள்கையைக் கடைசி வரையும் கைவிடமாட்டாதென்றும்கூறினார் பியாவ்ரா மக்களுக்குப் பல இன்னல்களை அளிப்பதை விட்டுவிடுமாறு அவர் சமஷ்டி நைஜீரியாவைக் கேட்டுக்கொண்டார். நைஜீரியாவின் உள்நாட்டுப்போர், ஆபிரிக்காவின் எதிரிகளுக்கே உதவுமென்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: ELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

[illegible]
ஆடி மாதம் 23-ந் திகதி
(7-8-68)

# 'தேவைகளைப் பூர்த்திசெய்ய மனையியல், தையற்கலை பாடங்களைப் பயிலுங்கள்'

## மக்கள் தேவை வேறு

சாதாரண பொதுமக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பது வாழ்க்கைச் செலவு குறைய வேண்டுமென்பதும், அத்தியாவசியப் பொருள்கள் தாராளமாக நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்பதும்தான். உணவு உடை வசிப்பிடம் இவை மூன்றும் தான் மனிதனின் அத்தியாவசியத் தேவைகள். இவற்றை நிறைவேற்றுவதில் வெற்றி காணமுடியாத எந்த அரசாங்கமும் மக்களின் ஆதரவையும், அனுதாபத்தையும் பெறமுடியாது. இன்று ஆட்சிபீடத்தில் இருக்கும் தேசிய அரசாங்கத்துக்கு இது தெரியாமலிருக்கமுடியாது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவோம், வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஒழிப்போம், வீடில்லாப் பிரச்னையை நீக்குவோம், தேசிய ஐக்கியத்தை உருவாக்கி நிலைநாட்டுவோம் என்று இது போன்ற வாக்குறுதிகளுடன் இன்றைய ஆட்சியாளர் பதவிக்கு வந்தனர். ஆட்சிபீடத்தில் அமர்ந்த நேரத்தில் காட்டிய உறுதியும், துணிவும், ஆர்வமும் அடுத்த தேர்தல் நெருங்கநெருங்கக் குறைந்துவருகிறது. தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பிரதமரும் மற்றும் சில அமைச்சர்களும் மனப்பூர்வமாக முயற்சி செய்துவருகின்ற போதிலும், சில அமைச்சர்களின் செயலும், அசமந்தப்போக்கும், கவனக்குறைவும், கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆற்றலில்லாத தன்மையும் அரசாங்கத்தின் நல்ல நோக்கத்தையும் முயற்சியையுமே கெடுப்பதாக அமைந்துவிடுகிறது. சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்குவதில் ஓரளவு பிரதமர் வெற்றி பெற்றிட்டியபோதிலும் அதை நிலைநாட்டுவதிலவருக்குப் போதிய ஒத்துழைப்பும், உதவியும் கிடைக்கவில்லை, அடுத்த தேர்தலைக் கருத்திற்கொண்ட அரசியல்வாதிகளால் நாட்டின் சூழ்நிலைமாற்றப்பட்டுவருவதாலும் அவர் வெற்றியிட்டமுடியாத நிலையில் இருக்கிறார். அரசாங்கம் அமைந்தபோது அவர் காட்டிய உறுதியும் துணிச்சலும் குறைந்து வருகிறது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்கும், அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாட்டை நீக்கவும் அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டிருப்பது உண்மையே. ஆனாலும் முயற்சி எடுத்தால் மட்டும் போதாது செயலில் வெற்றி கிடைக்கவேண்டும்.

அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் பற்றியோ, அரசாங்க இலாகாக்களிலுள்ள நிபுணர்கள் கொடுக்கும் புள்ளிவிபரங்களைப் பற்றியோ பொது மக்களுக்குக் கவலையில்லை. விலைவாசி குறையவேண்டும், அத்தியாவசியப் பொருள்கள் தாராளமாக நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை. இதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கத்துக்கு இன்னும் இருபது மாதங்கள் கூட இல்லை. இதற்குள் தீவிரமான உறுதியான நடவடிக்கை எடுக்காவிடில் அடுத்த தேர்தலில் மக்கள்காட்டும்புள்ளிவிபரம் வேறாக இருக்கும்.

## ஹரிஜன இளைஞர் கொலை வழக்கு

### 5 எதிரிகளும் விடுதலை

ஹைதராபாத், ஆக. 6

ஆந்திர பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தில், சில வாரங்களுக்கு முன்னர், ஹரிஜன வகுப்பைச்சேர்ந்த ஒர் இளைஞனை இம்சித்துக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து எதிரிகளும், குற்றச்சாட்டைபுரெ ஸிக்கியூஷன் தரப்பு ருசுப்படுத்தத் தவறிவிட்ட காரணத்தால், நீதவானல் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

## "கலைகலைக்கழகத்துக்கு அத்திபாரம்"

உடுவில், செவ்வாய்

"தமிழ் மக்கள் தமது பழம்பெரும் கலைகளான இயல், இசை, நாடகம் ஆகியவற்றை பெருமளவில் மறந்திருந்தபோதிலும் திரு. கல்யாண கிருஷ்ண பாகவதர் போன்ற இசையாளர்கள் தமிழ்க்கலைக்கு அயராது பாடுபட்டு வருவது போற்றற்குரியது. இராமநாதன் இசைக்கல்லூரி 30 மாணவர்களுடன் ஆரம்பமாகி இன்று 500 மாணவருக்குமேல் இசை பயிலக்கூடியதாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ் வளர்ச்சியின் முடிவு இதே இடத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் அமைய அத்திவாரமாக அமையும்".

உடுவில் கிராமசபை மண்டபத்தில் சங்கீதவித்துவான் பிரம்மஸ்ரீ எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதரின் சங்கீதக்கச்சேரிக்குத் தலைமைதாங்கிய யாழ்ப்பாண மாவட்ட உதவிஅரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

## பாக். வெளியுறவு மந்திரி

### மா-சே-துங்குடன் சந்திப்பு

பீகிங், ஆக. 6

பீகிங்குக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி திரு. ஹுசெயின் நேற்றுச் சீனத் தலைவர் திரு. மா-சே-துங்கைச் சந்தித்தார்.

அவர் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

சீன வெளியுறவு மந்திரி திரு. சென் யியும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

## யாழ்ப்பாணத்தில் உதவி கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், புதன்

"மற்றெந்தப் பாடசாலைகளிலும் பார்க்க மாணவிகளைப் பொறுத்த அளவில் மனையியல், தையற்கலைப் பாடம் மிக முக்கியமானதொன்றாகும். சமுதாய பொருளாதார ரீதியிலும் இப்பாடங்களைப் பயில்வதால் நாம் எமது தேவைகளை நிறைவேற்றுவதோடு எமது பணத்தையும் மிச்சப்படுத்தமுடியும்."

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த உதவி கல்வி அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா வேம்படி மகளிர்கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தையற்கலை, மனையியல் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுமார் 100 கல்லூரி மாணவிகள் கலந்துகொண்ட இப்பயிற்சி வகுப்பை திரு. காமினி ஜெயசூரியா கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார். டைமாதிக வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

கல்லூரி முகப்பில் மாணவிகள் அணிவகுத்து நின்று வாத்திய இசையுடன் உதவி அமைச்சர், வித்தியாதிபதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, உபசபாநாயகர் எம். சிவசிதம்பரம் உட்பட அனைவரையும் வரவேற்றனர். திரு. காமினி ஜெயசூரியா இங்கு மேலும் பேசியதாவது:

நாடு முழுவதிலும் இப்படியான பயிற்சி வகுப்புகளை நடாத்த கல்வி அமைச்சுதற்போது திட்டமிட்டுள்ளது. இதற்கிணங்க கடந்தவாரம் கொழும்பில் வர்த்தகப் பாடத்துக்கான பயிற்சி வகுப்பொன்றைக் கல்வி அமைச்சு நடாத்தியது. முக்கியமாக இந்நாட்டின் கிராமப்புறத்தில் வாழும் பெண்கள் தையற்கலை, மனையியல் பாடங்களைப் பயில்வதனால் நல்லதொரு சமத்துவமான சமுதாயத்தை இங்கு உருவாக்க முடியும்.

தேசிய அரசாங்கம் இதற்கான உபகரணங்களை இறக்குமதி செய்யவென அந்நிய பணத்தை ஒதுக்கியுள்ளது. ஆனால் எமதுநாட்டில் அனேக மக்கள் இந்த அறிவை பெறுதலினால் தமது பணத்தை விரயமாக்குகின்றனர் எனக் குறிப்பிட்ட உதவி அமைச்சர் அவசர வேலைகாரணமாக தாம் உடனடியாக கொழும்பு திரும்பவேண்டியுள்ளது தமக்கு வேதனையளிப்பதால் இவ்வருட முடிவுக்குள் தன்னை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அழைக்கவேண்டுமெனவும் இதற்கான சந்தர்ப்பத்தை உபசபாநாயகர் திரு எஸ். சிவசிதம்பரம் அளிக்கவேண்டும் எனவும் அங்கிருந்த திரு. எம். சிவசிதம்பரத்தைக் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் பேசுகையில் 'யுனெஸ்கோ' உபகாரச்சம்பளத்தில் இலங்கையிலிருந்து 50 ஆசிரியைகள் இப்பாடங்களில் பயிற்சிபெறவெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண ஆசிரியைகளும் பயன்பெறக்கூடுமென்றூர்.

தொழிற் கல்விப் பகுதி மேலதிக டைரக்டர் ஜெனரலான திரு. எஸ். எம். டி. சில்வா பேசியதாவது:—

தையல் மனையியல் பாடங்களையும், பல்கலைக் கழகத்தில் முக்கியமான பாடங்களில் ஒன்றுகச்சேர்க்குமாறு பல்கலைக் கழக அதிகாரிகளை கல்வி அமைச்சு கோரியுள்ளது! உயர்கல்வியில் இப்பாடங்களை ஒன்றுகச் சேர்ப்பதினால் தமது பிள்ளைகள் வருங்காலத்தில் உத்தியோக வாய்ப்பைப் பெறமுடியும்.

காலையில் பாடசாலை மணி அடித்து மாலையில் முடியும் வரை கல்வி கற்பிப்பது மட்டும் ஒரு ஆசிரியன் கடமையன்று எந்த வேளையிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென கௌரவ கல்வி அமைச்சர் தெரிவிப்பதையே நானும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நல்லதொரு சமுதாயத்தை எங்கள் நாட்டில் உருவாக்க எமது ஆசிரியர்களும், மாணவர்களும் ஒழுக்கமுள்ளவர்களாகத்திகழவேண்டும்.

வடபகுதியில் பிரதம கல்வி ஆலோசகர் திரு ஞானசேகரம் நன்றி தெரிவித்துப் பேசினார். இப்பயிற்சி வகுப்பு இம்மாதம் 13-ந் திகதி வரையும்நடைபெறும்.

உதவி அமைச்சரும், அவரது குழுவினரும் நேற்று நண்பகல் விமானத்தில் கொழும்பு திரும்பினார்கள். (கா. ந.)

## இன்றைய பலன்

(7-8-68)

ஆடி மீ 23 உ

புதன்கிழமை

திதி- சதுர்த்தசி இரவு 7-35 மேல் பூரணை.

நட்சத்திரம் - உத்தராடம் இரவு 8-37 மேல் திருவோணம்.

ராகுகாலம் - 12-04 1-34.

சுபநேரம் - 4-34—6-04.

இன்று பிறந்தவர்களுக்கு— கவலைகள் பறக்கும் வைதனமுட சேரும். இல்லறத்தில் இனிமை கவழும். வயது முதிர்ந்த ஒருவரால் சிறிது ஏதாக்கல் தோன்றி மறைவதற்கு இடமுண்டு. தொழில் புரியும் இடத்தில் நன்மதிப்புக் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் சம்பள உயர்வுக்கும் இடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் ஒன்று சேருவார்கள். தகுந்த சந்தர்ப்பத்தில் மூத்த சகோதரத்தின் உதவி தாராளமாகக் கிடைக்கும்.

மேஷம் - மாதருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்.

ரிஷபம் - பக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

மிதுனம்- திடீர் தாக்குதல், திகைக்க வைக்கும் சம்பவம்.

கடகம் - காதல் செய், கவலைகள் பறக்கும்.

சிம்மம் - தொழில் தொல்லை, துன்பம் தொடரும்.

கன்னி - சாந்த குணம், சன்மானமுண்டு.

துலாம் - அதிகார மேன்மை, அதிர்ஷ்டமுமுண்டு.

விருச்சிகம் - தெளிந்த மனம், தேடி வரும் பொருள்.

தனுசு- சிந்தனை தடைப்படல், செலவுகள் அதிகம்.

மகரம் - ஆசை அலைகள், அலைப்பெயருண்டு.

கும்பம்- மனை வாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

மீனம்- தூக்கம் கெடும், துன்பம் அணுக்கும்.

[illegible]

## மனைவி மகள் கொலை

### கணவன் தலைமறைவு

கொழும்பு, செவ்.

மஹரகமவிலுள்ள ஒரு வீட்டில் இறந்து கிடந்த ஒரு பெண், அவரது மகள் ஆகியோரின் கொலை சம்பந்தமாக பெண்ணின் கணவரைப் பொலிசார் தேடுகின்றனர்.

சோமா பிரியதர்சினி ஆகியோரின் கொலை சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வரும் நபர் டபிள்யூ ஆர். தர்மசேன 29 வயதான இவர் நீர்ப்பாசனப்பகுதியில் மெக்கானிக்காகக் கடமையாற்றுபவர்.

## 'சிறியவிஷயத்தைபெரிதாக்குவது எமது நோக்கமல்ல'

### சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி, செவ்.

'சிறிய விஷயத்தைப்பெரிதாக்கிவிட்டு அதுபற்றிப் பிரமாதப்படுத்துவது நமது கொள்கையுமல்ல, நமது கட்சியான தமிழரசுக்கட்சியின் கொள்கையுமல்ல' என சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் எழுதுமட்டுவாளில் உபதபாற்கந்தோரை சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

[illegible] தினம்மேலும் பேசுகையில் இலங்கை முழுவதும் தமிழிலேயே தொடர்புகொள்ள சட்டமூலம் செய்துவைத்தது யார் என்பதை மக்கள் அறிவார்கள் என்றூர்.

புதிய உபதபாற்கந்தோர் ஆரம்பித்து வைக்கப்பட்டதும் வடவெரும்பாக தபாற்தந்தி தொலைபேசித் தொடர்பு அத்தியட்சகர் திரு. தருமலிங்கம் யாழ். உதவி அரசாங்க அதிபருடன் தொலைபேசிமூலம் முதலில் தமிழில் தொடர்பு கொண்டார். தபால் தந்தி தொலைபேசி அமைச்சருக்கு தமிழில் நன்றிதெரிவிக்கும்தந்தியொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

கிராம முன்னேற்றச் சங்க செயலாளர் திரு க. இலிங்கநடேசன் நன்றி கூறினார்.

## திருமதி லோரா குலரத்னவுக்கு சுகவீனம்

கொழும்பு, செ[வ்.]

பத்மினி கொலைவழக்[கில்] தூக்குத்தண்டனை விதி[க்கப்]பட்ட மூவரில் ஒருவரா[ன] திருமதி லோரா குலரத்[ன] சுகவீனம்காரணமாக சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் [சிகி]ச்சைக்காக அனுமதிக்கப்[பட்]டுள்ளார். இவர் கொ[லை] செய்யப்பட்ட (மதி[ப்பிற்குரிய]) டாக்டர் குலரத்ன[வின்] மனைவி)யின் மாமியார் [என்]பது தெரிந்ததே.

## 'நாவலர் பிறந்த மண்ணில் பாகுபா[டு]'

நாவலப்பிட்டி, செ[வ்.]

"ஆறுமுகநாவலர்போ[ன்ற] சைவப்பெரியார்கள் தோ[ன்]றிய வடபகுதியில் சமய [...] காட்டிலே இனத்துவே[...] காட்டுவது வேதனை[க்குரி]யது. மனிதகுலத்தில்பிற[ப்பால்] எவரையும் வேறுபாடு[படுத்]தக்கூடாது."

இவ்வாறு இ. தொ. [கா.] நாவலப்பிட்டி மாவட்[டப்] பிரதிநிதி திரு. எம். [...]கல் ஜோசப் நாவலப்பிட்[டி]யில் நடைபெற்ற கூட்[டத்]தில் பேசுகையில் குறிப்[பிட்]டார்.

அவர் தொடர்ந்து பே[சு]கையில் கூறியதாவது:-

"உயர் ஜாதியினர் [...] எண்ணப்படுபவர்கள்பெரு[ம்]பான்மையாக இருப்ப[...] அவர்களுடைய [...] யைப்பெறும் ஒரே சுய[...] என்ன க் கொள்கையுட[ன்] ஹரிஜனர்கள் விஷயத்தி[ல்] திரு சுந்தரலிங்கம்போ[ன்ற] அரசியல் வாதிகள் தம[து] மனச்சாட்சிக்கு விரோ[த]மான காரியங்களில் ஈடுப[ட்]டுள்ளனர்"

## 'தவிர்க்க முடியா[த] அங்கம்'

நாவலப்பிட்டி, செ[வ்.]

"போராட்டம் என்ப[து] தொழிலாளர்களின்தவிர்[க்க] முடியாத ஓர் அங்கமா[க] ஐக்கியப் படுத்தப்பட்டு[...]டவி. பிற்போக்கு சக்தி[கள்] இந்நாட்டில் இயங்கி[க்] கொண்டிருக்கும்வரை [...] நிலையின் பொருளாதா[ர] அபிவிருத்திக்காக உழை[க்]கும் மக்கள் கூட்டம் அ[டி]படை பிரச்னைகளுக்கா[க] போராடியே தீரவேண்[டி]யுள்ளது"

இவ்வாறு லங்கா தோ[ட்]டத்தொழிலாளர் யூனிய[ன்] வாலிபர் சங்க மாத்த[ளை] மாவட்ட கிளைக் கூட்[டத்]தில் மாவட்டப் பிரதிநி[தி] திரு. எஸ். இ. ரஸ்நாத[...] பேசுகையில்குறிப்பிட்டா[ர்].

## கன்னியர் தியான[ம்]

பண்டத்தரிப்பு, செ[வ்.]

திருக்குடும்ப சபையை[ச்] சேர்ந்த கன்னியருக்கா[ன] தியானம் இவ்வாலை திரு[க்]குடும்ப கன்னியர்மடத்தி[ல்] நடைபெறுகிறது. அமல[...]யகுரு கிரேஷ்டர் வ[ண.] குரூஸ் சுவாமியார் தியா[ன] போதகம் செய்கிறுர்.

## திராட்சை பாதிப்[பு]

பண்டத்தரிப்பு, செ[வ்.]

வடபகுதியில் திராட்[சைச்] செய்கை இப்போது பாதி[க்]கப்பட்டுள்ளது. கடந்த இ[ரு] போகங்களிலும் திராட்[சை] பயிர் விவசாயிகளுக்[குப்] பெரும் ஏமாற்றத்தை[க்] கொடுத்துள்ளதாகத் தெரி[ய] வருகிறது. வெள்ளம், பு[...] ஆகியவற்றுலேயே இப்பயி[ர்] பெரிதும் பாதிக்கப்பட்ட[து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘முதலாம் எதிரி துப்பாக்கியை பறித்து எடுத்தார்’

## துப்பாக்கி பறித்த வழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, செவ். “இரண்டாம் எதிரி இரத்தினம், மூன்றாம் எதிரி கதிரவேலு, நான்காம் எதிரி ஆனந்தசிவம் ஆறாம் எதிரி விஜயரத்தினம் ஆகியோர் பொலிசாரை கத்தியாலும் தடியாலும் தாக்கியதைக் கண்டேன். முதலாம் எதிரி குணரத்தினம் துப்பாக்கி வைத்திருந்த பொலிஸ்காரருக்கு பின்னால் வந்து துப்பாக்கியை பறித்து எடுத்தார் என உடுப்பிட்டி வல்லை நெசவுநிலையத்தில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான கணபதிப்பிள்ளை கந்தசாமி என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. சின்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கில் உடுப்பிட்டியைச் சேர்ந்த கே. குணரத்தினம், எஸ். இரத்தினம், வி. கதிரவேலு, சி. ஆனந்தசிவம், செ. ஜெகதீஸ்வரன், வி. ஜெயரத்தினம், என். பாலசிங்கம், பொ. சின்னத்தம்பி, இ. ஆறுமுகம், பொ. சுந்தரலிங்கம், கே. சந்தானம், செ. துரைரத்தினம், ஆர். விஜயரத்தினம், சி. நடராசா, என். பாலகிருஷ்ணன் ஆகியோர் கடந்த மே மாதம் 30-ம் திகதி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் பாலசூரியா கான்ஸ்டபிள்களான பியசேன, விஜயசேன, ஜெயரத்தின ஆகியோரை வல்லை நெசவு நிலையத்தில் வைத்துகடமை செய்யவிடாது தடுத்தும், காயம் உண்டுபண்ணியதாகவும், துப்பாக்கியை பறிமுதல் செய்ததாகவும், பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்டது.

கந்தசாமி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவ தினத்தன்று பிற்பகல் 4 மணியளவில் வேலை முடிந்து பஸ்ஸுக்காக நெசவுநிலைய வாசல் மேற்றயில் வந்துநின்றேன். அப்போது மேற்கு வாசலிலும், பிரதான வீதியிலும் சனக்கூட்டம் நிற்பதைக் கண்டேன். சனக்கூட்டத்தில் நின்ற இந்த எதிரிகள் எல்லோரையும் எனக்குத் தெரியும். சனக்கூட்டம் பொலிஸாரைத் தாக்கியதைக் கண்டேன். சைக்கிளில் வந்து கொண்டிருந்த 2ம் எதிரியான இரத்தினம் சைக்கிளை நிறுத்திவிட்டு வேலியில் தடி ஒன்றைப் பிடுங்கிப் பொலிஸாருக்கு அடித்தார். எதிரிகளில் சிலர் பொலிஸாருடன் கட்டிப்பிடித்து விழுந்து நிலத்தில் உருண்டார்கள். இச்சம்பவ நேரத்தில் மேற்கு வாசலில் நாலைந்து பேர் வரை பஸ்ஸிற்காகக் காத்து நின்றோம்.

மேல்விசாரணை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### தடுப்பு மருந்து

உடுவில், செவ்வாய். சுகாதார இலாகாப் பகுதியினரால் கிராமந்தோறும் வழங்கப்பட்டு வரும் சிறுபிள்ளைவாதத் தடுப்பு மருந்து கோண்டாவிலில் பல இடங்களிலும் இம் மாதம் 9ந் திகதியிலிருந்து 21-ந் திகதிவரை கொடுக்கப்பட இருக்கிறது.

### எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன். தபால் வானினால் 13 வயதுச் சிறுவனை மோதி மரணமடையச் செய்ததான வழக்கில் எதிரிவிடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு நீதிபதி ஜனாப் ஸ்மயில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. எதிரியின் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஆர் விஸ்வநாதன். புறக்டர் பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார் இவ்வழக்கில் தபால் கந்தோர் ஊழியரானவேலுப்பிள்ளை செல்வரத்தினம் என்பவர் நாயன்மார்கட்டைச் சேர்ந்த தம்பித்துரை பரமானந்தன் என்ற 13 வயதுச் சிறுவனை தபால் வானினால் மோதி மரண விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. [தே.நி.]

### ‘தமிழ் மக்களின் தலையாய பணி’

வெள்ளவத்தை, செவ். “ஈழத்திலும் நகரிலுள்ள அரசாங்க அலுவலகத்தில் பிறந்து முன்னேறி வரும் முதல் முத்தமிழ் மன்றமான [illegible] மன்றம் சென்ற மூன்று ஆண்டுகளாகச் சிறந்த முறையில் பாரதிக்கு விழா எடுத்ததை எவராலும் மறக்க முடியாது. கலை புதிதாய், பொருள் புதிதாய் வளம் புதிதாய், சொல் புதிதாய்ச் சுவை மிக்க கவிகள் படைத்தளித்த பாரதிக்கு விழா எடுத்துப் போற்றுவது தமிழ் மக்களின் தலையாய பணி”.

கொழும்பு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தினர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14-ந் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடவிருக்கும் பாரதி விழாவையொட்டி மன்றத்தின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் செயலாளர் திரு. சி. இலகநாதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இம்முறை மேற்படி மன்றம் நடாத்தவிருக்கும் போட்டிகள் பற்றி நமது நிருபரிடம் செயலாளர் தெரிவித்துள்ள விபரங்கள் வருமாறு:

பேச்சுப்போட்டி 15 நிமிடங்களுக்குள் பேசக்கூடியதாக பின்வரும் தலைப்புகளில் நடைபெறும்.

பாரதியின் விடுதலை, கவியுலகில் பாரதியின் புரட்சி, பெண்ணுலகில் பாரதி, நான் காணும் பாரதி. கட்டுரைப்போட்டியில் 10 நிமிடங்களுக்குள் வாசிக்கக்கூடியதாக ஏதேனும் ஒரு கட்டுரை பின்வரும் தலைப்புகளில் எழுதப்படவேண்டும்.

பாரதியும் பொதுவுடைமையும், பாரதியின் கவித்திறன், பாரதிகண்ட தமிழ் நாடு, பாரதியும் [illegible].

மேற்படி பாரதி விழாவிற்கு தமிழகத்திலிருந்தும் பல அறிஞர்களை [illegible] பதற்கு ஏற்பாடுகள் நடை[illegible] பெற்று வருகின்றன.

### தமிழரசு இளைஞர் கூட்டம்

உரும்பிராய், செவ். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தெல்லிப்பழைக் கிளைக்கூட்டம் இம்மாதம் 8ந் திகதி மாலை 6-30 மணிக்கு கிளைத்தலைவர் சு. தம்பு தலைமையில் தெல்லிப்பழையில் கூடுகிறது. காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

### தடுப்பு மருந்து

பண்டத்தரிப்பு, செவ். இளம்பிள்ளைவாதத் தடுப்புக்கான மருந்து இளவாலைப் பகுதியில் இம்மாதம் 11-ம் திகதி விநியோகிக்கப்படவிருக்கிறது. 3 மாதம் தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு இந்நோய் வராது தடுப்பதற்காகவே சுகாதாரப் பகுதியினர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து மற்றும் பல இடங்களிலும் இவ்விநியோகம் நடைபெறும்.

### ‘உடனடியாக நிவர்த்தி செய்யுங்கள்’

யாழ்ப்பாணம், புதன். ‘குடிதண்ணீர இன்மையால் மக்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர். இக்குறை நீண்டகாலமாக இருந்துவருகின்றது. இதனை உடனடியாக நிவர்த்தி செய்து மக்களின் குறையை நீக்குங்கள்’

இவ்வாறு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை பூநகரி சத்தி கிராம முன்னேற்றச் சங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கவிருக்கிறது.

சங்கத்தலைவர் திரு. கே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கமிட்டி கூட்டத்தில் மேற்காணும் தீர்மானமும் நிறைவேறியது.

பூநகரியின் எதிர்காலம் நலமாக அமையவேண்டுமானால் சங்குப்பிட்டி-கேரதீவுக்கடல் மூடவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும் பூநகரியாரினர் வைத்தியசாலை கற்றுவேலியை அரசாங்க உதவியுடன் சிரமதான மூலம் சீர்செய்ய மக்களைத் திரட்டவேண்டும். [ந.நி.]

### ரயிலிலிருந்து விழுந்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், புதன். காங்கேசன்துறையில் நேற்று முந்தினம் ரயிலிலிருந்து விழுந்து கண்டையில் பெரும் காயங்களுக்குள்ளாகிய தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்வி எஸ். பரமேஸ்வரி (19 வயது) என்பவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந.நி.)

### ஆலயப் பிரவேச..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆலயப் பிரவேசத்திற்கு உடந்தையாயிருக்கும் சகல எம். பி. க்களும் தமது பதவியைத் துறந்து மேற்கூறிய இலட்சியத்தை முன்வைத்து தேர்தலில் போட்டியிடவேண்டும் எனக்கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாவிட்டபுரத்தில் 23-ம் திருவிழாவன்று தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு வந்த அடியார்களை கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும், பலாத்காரப் புரட்சியில் நம்பிக்கையுள்ளவர்களும் பலாத்காரமாக ஆலயக் கதவுகளை உடைத்தெறியும்படி திரு. எட்மன் சமரக்கொடியின் தலைமையில் வந்திருந்து தடை செய்து கோவில் சொத்துக்களை நாசம் செய்தமையைப் பலமாகக் கண்டிப்பதாகவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிசார் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருந்தால் சைவசமயிகள், பிராமணர் முதற்கொண்டு உண்மையான ஹரிஜன பக்தர்களின் மனமும் வேதனைப்பட்டிருக்காது என்றும், புத்தசமய மறுமலர்ச்சிக்கு அநகாரிக தர்மபாலாவைப் போன்று சைவசமய வளர்ச்சிக்கு அயராது உழைத்த நாவலர் காட்டிய உண்மை சைவ நெறியை ஏனைய [illegible] தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பூநகரி

### விவசாயிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், புதன். பூநகரிப் பகுதியில் கடல் நீர் வேளாண்மையை அழித்துப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியதற்கு விவசாயிகளுக்கு அரசாங்கம் பணம் கொடுக்க முடிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது. இம்மாதம் 16-ம் திகதி செல்விபாதிவு, மறவகுறிச்சிக் கிராமங்களுக்கும், 18-ம் திகதி செட்டிய குறிச்சிக் கிராமத்துக்கும், 20-ம்திகதி தம்பிராய் கொல்லகுறிச்சி நல்லூர் போன்ற கிராமங்களுக்கும் பணம் கொடுக்கப்படவிருக்கிறதென்று தெரிகின்றது. [ந. நி.]

### அரசாங்க.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன், சிவசிதம்பரம் தெரிவித்தார்.

திருநெல்வேலி பிரயோக போஷனைத் திட்டத்தாரின் அனுசரணையுடன் கோப்பாய் தெற்கு இளம் விவசாயிகள் கழகத்தினதும், மாதர் முன்னேற்றச் சங்கத்தினதும் பரிசளிப்புவிழா நேற்று முன்தினம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது தலைமை வகித்த திரு. என். சிவசிதம்பரம் மேலும் குறிப்பிட்டதாவது:

அரசாங்கம் தனது உபஉணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதன் மூலம் எமது அந்நியச் செலாவணியை நாம் சேமித்து அதனை கைத்தொழில் வளர்ச்சிக்குச் செலவிட முடியும். எனவே புதிய குடியேற்றத்திட்டங்களில் படித்த வாலிபர்கள் குடியேறி நாட்டின் சுபிட்சத்திற்கு உழைக்கவேண்டும்.

கோப்பாய் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை, வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. எஸ். யோசேப், திரு. எஸ். தனபாலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

கலாஷேத்திர மாணவிகளின் நடனம், மெல்லிசை, கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. செயலாளர் என். ஜெயரட்ணம் நன்றி தெரிவித்துப் பேசினார். [கா.நி.]

### நாடும் நடப்பும்

‘கல்வி அமைச்சர் திரு. இரியகொல்ல இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வாததையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால் இப்படியான நேரங்களில்தான் என்னைப் போன்ற உதவி அமைச்சர்களுக்கு வெளியிடங்களுக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது’

நேற்று இங்கு விஜயம் செய்த உதவி கல்வி அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா வேம்படி மகளிர் கல்லூரியில் பேசுகையில் இப்படிச் சொன்னாராம்.

இங்கு மனையியல் தையற்கலைப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்துவைப்பதில் தான் மகிழ்ச்சியடைவதாகக்குறிப்பிட்ட திரு. காமினி ஜெயசூரியா இங்கு குழுமியிருந்த நாற்றுக்கணக்கான பெண் ஆசிரியைகள் மத்தியில் தனது மனைவிக்குப் புகழ் மாலையொன்றையும் சூட்டினார்.

தனது மனைவிக்கு மனையியல் தெரியுமாஎன்பது தனக்குத் தெரியாவிட்டாலும், எலுமிச்சம்பழம் மலிவான காலத்தில் அவர் அதை வாங்கி ஊறுகாய் போட்டு எலுமிச்சம்பழம் அதிகவிலையான காலத்தில் அதை உபயோகிப்பதைத் தான் கண்டுள்ளதாகச் சிரித்துக் கொண்டே சொன்னாராம்.

மனைவிக்கு மனையியல் கலை தெரியுமா என்பதுதான் எனக்குத் தெரியாது என்று சொன்ன அமைச்சர் தனக்குத் தேசியசுய ஊறுகாய் பற்றியும் புரியாது என்பதைச் சொல்லாமல்சொல்லியிருக்கிறார்.

* * *

இன்னுமொரு அமைச்சர்கள் இங்குள்ள உணவுப் பொருள் பற்றி ஏதாவது ஒன்று சொல்லித்தானே வேண்டுமென்று நினைக்கிறார்கள் போலும்.

நல்லெண்ணெய் நல்லது என்ற ‘சேர்டிபிக்கட்’ கொடுத்துவிட்டுச்சென்ற உள்நாட்டமைச்சர் சமீபத்

8ம் [illegible] பார்க்க)

# உயர் கல்விக்கு மிக அவசியமானது எது?

## அமைச்சர் விளக்கம்

குருநாகலை, செவ். ஒழுக்கமும் கட்டுப்பாடும் உயர் கல்விக்கு மிக அவசியம். ஆனால் எமது நாட்டிலுள்ள சில பல்கலைக்கழகங்களில் காடைத்தனமும் அருவருக்கத்தக்க செயல்களும் தலைதூக்கிவருவது மிகவும் வேதனைக்குரிய விஷயம். நாட்டின்தேசிய சொத்தாக இருக்கும் பாடசாலை மாணவர்களிடையே இவ்வித ஒழுக்கக்கேடுகள் பரவாது தடுக்கப் பெற்றோரும் ஆசிரியர்களும் மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்’

இவ்வாறு கல்விகலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல குருநாகலை மாலியாதேவா மகளிர் கல்லூரி இலங்கைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இரியகொல்ல மேலும் பேசுகையில் இந்த நாட்டுக்கு இப்போது கட்டுப்பாடான ஆசிரியர்களும் நிர்வாகஸ்தர்களும் தேவை எனக் கூறினார்.

இத்தலைமுறையினராலேயே நலமொரு சந்ததியை உருவாக்கமுடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

தாம் அமைச்சர் பதவியை தொடர்ந்து வகித்தாலும் வகிக்காவிட்டாலும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஒழுக்கக்கேடுகளை ஒரு முடிவுக்குக்கொண்டுவரத் தொடர்ந்து முயற்சிக்கப் போவதாகவும் அமைச்சர் எடுத்துக்கூறினார்.

### வலை திருட்டு

சுழிபுரம், செவ்வாய். திருவடி நிலைச்சமுகாமையிலுள்ள மழுவைக் கடற்கரையில் மீன்பிடி வலைகள் களவாடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலை களவுபோனது சம்பந்தமாக சங்கானைப்பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் சந்தேகத்தின் மீது சுழிபுரம் மேற்கு இருந்தவடிவைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து ரூபா ஐநூறு பிணையில்விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இனிய மணிகளே!

'மலர்' உங்கள் பக்கம். உங்களை உற்சாகப்படுத்தி ஆர்வம் தந்து படிக்கவைத்து, எழுத வைத்து முன்னேற்றி வைப்பதே எமது நோக்கம்.

மலரில் என்னென்ன புதிய அம்சங்களைச் சேர்க்கலாம் என்பது பற்றி ஆலோசனை சொல்லுங்கள். நல்ல நல்ல விஷயங்களை எழுதி அனுப்புங்கள்.

இப்போது பாடசாலை விடுமுறை தினமல்லவா? உங்களுக்கெல்லாம் நிறைய நேரம் ஓய்வு கிடைக்கும். அந்நேரத்தில் சிறிதளவு நேரத்தையாவது நல்ல பயனுள்ள புத்தகங்களை தெரிந்து எடுத்து படியுங்கள். அப்படி நீங்கள் ரசித்துப்படித்த புத்தகங்களைப் பற்றி எமக்கு எழுதி அனுப்பிவையுங்கள்.

அடுத்த வாரம் பரிசுப் போட்டி-3 உங்களை எமாற்ற மாட்டாது. அடுத்த போவா தினத்துக்கு முன்னால் சந்திப்போமே!

— ராமா

ஒருபடி உயர்வோமா—8

# வஞ்சம் தீர்ப்பது வாழ்வுக்கு உதவாது!

கணேஷ்

நாம் ஒரு சிறிய விஷயத்துக்காகக்கூட வஞ்சத்தைத் தீர்க்கவேண்டும் என்ற நினைவுகொண்டு எவ்வளவோ அதற்காக இந்த சிந்தனையில் அதிக நேரத்தை வீணாக செலவிடத் தொடங்கிவிடுகின்றோம்.

இதனால் நாம் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்ய வேண்டிய நேரத்தைக்கூட அழிவுக்காக செலவிடுகின்றோம். வஞ்சம் பிறரை அழிக்கமட்டுமல்ல. நம்மையும் அழிக்க வழிகோலிவிடுகிறது. 'நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு' என்ற விவேகானந்தரின் வாக்கை நாம் நம்நெஞ்சத்தில் இருத்திக் கொண்டுவிட்டால் இப்படி பழிதீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற நினைவு நெஞ்சத்தில் குடிபுகாதவாறு தடுத்துக்கொள்ளலாம். நல்ல திசையை நோக்கிச்செல்ல அது வழிகாட்டும்.

வஞ்சம் தீர்க்கும் எண்ணம் நமது நெஞ்சில் தோன்றிவிட்டால் நமது உள்ளநிலை தடுமாறி உடல்நிலை குன்றி நமது வாழ்வையே எரித்து அது சாம்பலாக்கிவிடும். அற்ப விஷயங்களுக்கெல்லாம் வஞ்சம் தீர்க்கவேண்டும் என்று நினைப்பதும் இவ்விதம் வஞ்சம் தீர்த்துக்கொண்டதும் அதில் ஏதோ ஒரு பெரிய ஆனந்தங்கண்டு விருப்புக் கொள்வதும் சிலரது வழக்கமாக இருந்துவிடுகிறது. இதனால் இவர்கள் நல்ல வாழ்வை வாழமுடியாது தமது வாழ்வைத் தாமே சிதைத்து விடுகிறனர். ஒருவர் தவறாக தெரியாத்தனமாகச் செய்துவிடுவதைக்கூட 'அவர் இதை மனதில் கொண்டுதான் இப்படிச் செய்திருக்கவேண்டும்' என தாமே அதைப் பெரிதாக்கி குறிப்பிட்ட அந்த மனிதருக்கோ, நமக்கோ எந்த விதத்திலும் நஷ்டம் கேடு ஏற்பட்டாலும் சரியென்ற நேரத்தை வீணாக செலவிட்டு எந்நேரமும் சிந்தனைகளை இந்தவழியிலேயே இழுத்துக்கொண்டு திரிந்து வஞ்சத்தை தீர்த்துவிடுவது நாம் வளர்ந்த சமுதாயத்துக்கு நாம் செய்யும் மிகப் பெரிய துரோகமாகவே முடியும்.

எதையும் வஞ்சம் தீர்க்கும் நோக்கோடு பார்க்காமல் நியாயம், மனச்சாட்சி இவற்றை முன்வைத்து ஆலோசித்து செயல்படுத்த நாம் முன்வரவேண்டும்.

'பிறர் தெரியாமல் தவறு செய்திருக்கலாம்' என்ற போக்கை நாம் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டால் நாம் எப்போதுமே நியாயத்தின் பக்கமே நின்றுகொண்டிருக்க வாய்ப்பிருக்கும். அவசர முடிவாக வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் இதற்காக பிறகு நாமே முடிவற்று வருந்தி தமது மதிப்பிட முடியாத வாழ்நாளையே வீணாக்கிவிட வாழநேரிடும். நல்லதை நினை. நல்லதைச் செய். ...

> ## அடுத்த மலரில்!
>
> காலஞ்சென்ற முதலாவது விண்வெளிவீரர் யூரி. ககாரின்
>
> o
>
> 'சுபிபாரதி' யின் குட்டிக்கதை
>
> o
>
> ராமா ராஜகோபால் எழுதும் 'ராஜாவீட்டுப் பிள்ளை' தொடர்கவினம்
>
> o
>
> விடுகதை, துணுக்குகள், பரிசுப்போட்டி - 3 மற்றும் சுவையான விஷயங்களுடன்.

## உலக நண்பர்கள்

தம்பி தங்கைகளே! நீங்கள் பேனா நட்புக்கொள்ள விரும்புகிறீர்களா? ''உலக நண்பர்கள்'' நூல் உங்களுக்கு நல்ல வாய்ப்பினை அளிக்கிறது. ''கலைச்செல்வம் பதிப்பகம், 43 நுவரெலியா வழி, வெள்ளவத்தை, இலங்கை'' என்ற முகவரியிலிருந்து இப் புத்தகத்தை ஆசிரியர் ந. தர்மலிங்கம், ஆண்டுமலராக வெளியிட்டுவருகிறார். சென்னையில் நடைபெற்ற 2-ம் உலகத் தமிழ் கருத்தரங்கினை முன்னிட்டு ''உலக நண்பர்கள்'' 11-வது ஆண்டுமலர் சிறப்பு வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ளது.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு, மொறிஷியஸ் ஆகிய இடங்களிலுள்ள தமிழ் நண்பர்களை பேனா நண்பர்களாக்கவிரும்புபவர்களுக்கு 'உலக நண்பர்கள்' நூல் உதவுகிறது.

— 'பூரணி'

## அற்புதப் பூ!

வாரமொருநாள்
மலருமாம்
வண்ணமாக மலருமாம்
சிறுவர்நாங்கள் மகிழவே
சிறப்புடனே மலருமாம்!

உலகினில் ஒருபடி
உயர்ந்திடவே
உன்னதமான
கட்டுரைகள்
விஞ்ஞானத்தின்
புதுமைகளும்
விந்தைச் செய்திகளும்
மலரும்

அதுவே
யாழ்ப்பாணத்தினிலே
புது வேகத்தில்
வெளியாகும்
மலரும் மாணவர்
மலராம்
பலரும், உவக்கும்
இன்மலராம்

— சு. அகிலன்

## துதிபாடும் சிறுவர்

கோவிலுக்குப் போவோம்
கும்பிட்டு மகிழ்வோம்
ஆவின் பாலைக் கொண்டு
அபிஷேகம் செய்வோம்

பூக்கள் தேடிப் பறித்தே
பூசைசெய்யக் கொடுப்போம்
காவடியும் எடுப்போம்
சந்தனமும் பெறுவோம்.

— குமார் தனபால்.

## நம் கடன்

அ. சந்திரன்

காடு வெட்டி கழனி பெருக்கி
நாட்டைக் காக்க வேண்டும்
வீடு தன்னில் பயிர் வளர்த்தே
வாட்டம் போக்க வேண்டும்.

நாட்டில் கடும் வறுமை தன்னை
ஓட்டி விரட்டி வேண்டும்
வீட்டைப் போலே நாட்டைக் காக்க
விருப்புக் கொள்ள வேண்டும்.

ஒன்று பட்டு வாழும் வாழ்வை
என்றும் பேண வேண்டும்
அன்பு மிக்க உள்ளம் தன்னில்
இன்பம் காண வேண்டும்.

மகிழ்வால் வருந்தும் மாந்தர் தம்மின்
பிணியைப் போக்க வேண்டும்
வசியும் வளனும் பெருக்கி நாட்டின்
வாட்டம் நீக்க வேண்டும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

o இலங்கையின் நிலப் பரப்பு யாது?
— 25,000 சதுர மைல்

o மூவேந்தர் என்பது எவரை?
— சேரன், சோழன், பாண்டியன்.

o பஞ்சபாண்டவரின் பெயர்களைத் தருக?
— தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன்.

o இந்தியாவின் முதல் பிரதமர் யார்?
— பண்டிட் ஜவர்ஹர்லால் நேரு.

o இலங்கையின் முதல் பிரதமர் யார்?
— டி. எஸ். சேனநாயக்கா.

o உலகின் பெரிய தீவு எது?
— கிறீன்லாந்து தீவு.

அனுப்பியவர்:
குணோமி வனஜா.

## மின்சாரம்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

''ஊரெழு கிராமத்திற்கு இம்மாதம் பிற்பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுவிட்டன. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', என்பதுபோல் ஊரெழு கிராமமக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எமது வேலைகளுக்கு ஒத்துழைப்புத் தந்ததற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இதுபோன்று உரும்பிராய் கிராம மக்களும் ஒன்றுபட்டு எமது வேலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தால் விரைவில் மின்சாரத்தைப் பெறுவார்களென நம்புகிறேன்.''

இவ்வாறு உரும்பராய் பட்டினசபை உப-தலைவரான திரு. ஆ. சாரா வதிதம் தனது கிராம மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ். செல்லரத்தினமும் தனதுவட்டார மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## புதிய வழக்கறிஞர்

பருத்தித்துறை, செவ்.

கரவெட்டியைச் சேர்ந்த திரு. சிவசங்கரம் பாலேந்திரா, நீதியரசர் சி. ஜீ. வீரமந்திரி முன்னிலையில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இலங்கை சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையில் முதற்பிரிவில் தேர்ச்சி பெற்ற திரு. பாலேந்திரா சட்டக்கல்லூரி இந்துமகா சபைத் தலைவராகவும் கடமையாற்றினார். இவரது தந்தை காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. கே. சிவசங்கரம் ஆவார். தாயார் முன்னாள் கோப்பாய் அரசினர் மகளிர் பயிற்சிக் கல்லூரி புவியியல் விரிவுரையாளர் திருமதி பார்வதமந்தினி சிவசங்கரம் எம். ஏ. ஆவார்.

## தொழிலாளர் சாதனை

அளவெட்டி, செவ்.

காங்கேசன்துறை துறைமுகத் தொழிலாளர் குழுவொன்று 16 மணித்தியாலத்தில் 490 தொன் நிறையுள்ள சரக்குகளை ஏற்றி புதியசாதனையை நிலைநாட்டியுள்ளது.

காங்கேசன்துறை ஏற்றுமதி இறக்குமதி தொழிலாளர்களும் 'அருளன்' குழுவைச்சேர்ந்த தொழிலாளர்கள் இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் தும்பு, றப்பர், தேயிலை, சாரயம்ஆகிய 400 தொன் நிறையுள்ள சரக்குகளை 16 மணித்தியாலத்தில் ஏற்றி புதியசாதனையை நிலைநாட்டியுள்ளார்கள்.

## முயற்சி திருவினையாக்கும்

— கவரை. செ. சுந்தரம்பிள்ளை —

மாட்டு வண்டி ஓட்டி வாழும்
மருதன் பக்தி உள்ளவன்
பாட்டுப் பாடிக் கடவுள் பாதம்
பணியும் அன்பு பூண்டவன்.

பாரச் சுமைகள் ஏற்றிச் சென்று
பிழைக்கும் வாழ்க்கை கொண்டவன்
தூரமான இடங்கள் எங்கும்
சுமைகள் ஏற்றிச் செல்பவன்

மருதன் வண்டி ஓட்டும் ஓர்நாள்
மழைபிடித்துக் கொண்டது
தெருவில் உள்ள சேற்றில் வண்டி
சிக்குச் சிக்கிக் கொண்டது

இரவு மட்டும் எருதிரண்டும்
இழுத்து இழுத்துப் பார்த்தன
சேவல் மூத்து வலிவு மூத்து
சேற்றில் படுத்துக் கொண்டன

[தொடரும்]

''சூரியன் மார்க்''
வாசனை சந்தனப் பவுடர்
சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருடத்துக்கு

## 'இறீன்பீல்ட்' கழகம் தடுத்துவைக்கப்பட்டது

### யாழ். உதைபந்தாட்ட சங்கதீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

இறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை ஒருவருட காலத்துக்கு தடுத்து வைப்பதென யாழ்ப்பாண உதைபந்தாட்டச்சங்ககூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஒழுங்கு கமிட்டிக்கூட்டமும் நடைபெற்றது.

முறைதவறிய சுற்றுப் போட்டியை நடத்தியதாக 'இறீன்பீல்ட்' கழகத்தின் மீது தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

புனிதவளன், யாழ். றேஞ்சர்ஸ், கிறுஸ்கொப்பேர்ஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்களையும் 6 மாதங்களுக்குத் தடுத்துவைப்பதென்றும். இறீன்பீல்ட் ஒழுங்கு செய்த முறைதவறிய சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டதைத் தொடர்ந்தே இவற்றைத் தடுத்துவைப்பதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வேறுசில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

---

### தமிழ்ப்பிரயாணிகளின் சங்கடம்

அநுராதபுரம், செவ்

அநுராதபுரம் பஸ் நிலையத்தில் இதுவரை பஸ் போக்குவரத்து நேரசூசிகை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் போடப்பட்டிருந்தது. ஆனால் திடீரென இந்த நேரசூசிகைப் பலகை எடுக்கப்பட்டு இதற்குப்பதிலாக சிங்களத்தில் எழுதப்பட்ட ஓர் நேரசூசிகைப் பலகை போடப்பட்டுள்ளது. இதனால் தமிழ்ப் பிரயாணிகள் நிலை மிகச் சங்கடமாகியுள்ளது.

---

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 7—8—68**

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

844 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 தமிழ்ப்பாடல்கள், 7-30 குரல்வலை, 8-00 இசைவேளை, 8-15 இன்னாமிய கீதங்கள்.

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர் கேட்டவை.

844 மீற்றர் அல் 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 வேல்விழா அஞ்சல், 7-00 இராமசஞ்சிகை, 7-30 வேல்விழா அஞ்சல், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 சிறுகதை — 'சொர்க்கம்' — கே. சொக்கலிங்கம், 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்த இசை.

---

### தமிழ்காங்கிரஸ் புதிய கிளை

உரும்பராய், செவ்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் புதிய கிளை ஒன்று வட்டுக்கோட்டையில் அதிகாரசிப்பணம் செய்துவைக்கப்பட்டபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. க. குமாரசாமி, உபதலைவர்: திரு. வ. சண்முகநாதன், செயலாளர்: திரு. க. மகேஸ்வரநாதன், உபசெயலாளர்: திரு. வ. பண்டரிநாதன், பொருளாளர்: திரு.நா. சிவலோகநாதன் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை யொன்றும் தெரிவுசெய்யப் பட்டது.

---

### ஊரெழு-உரும்பராய் பட்டின சபை

**மாற்றும்படி தீர்மானம்**

புன்னாலைக்கட்டுவன், செவ்

"தமிழ்த்தாயின் வயிற்றில் பிறந்த நாம் ஒன்றுபட்டு ஒருமைப்பாட்டிற்குப் பங்கமின்றி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற வாக்குக்கிணங்க வாழவேண்டும்,' என்று உரும்பராய் பட்டின சபையின் உபதலைவரான திரு. ஆ. சுரானசிங்கம், உரும்பராய் பட்டின சபை என்ற பெயரை ஊரெழு-உரும்பராய் பட்டின சபை என மாற்றுவதற்கான பிரேரணையைச் சபைக்குக்கொண்டு வந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சின் அங்கீகாரத்துக்காக இத்தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## 'கந்தரலங்காரம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்'

நாவலப்பிட்டி, செவ்வாய்

"சங்கத்தில் புலவனாய்த் தமிழ் ஆய்ந்த முருகன் சிங்கள மக்களின் நெஞ்சங்களிலேயும் தனித்துவ தெய்வீக சக்தியாய்த் திகழ்கிறான். சட்டதிட்டங்களாலும் அரசியல் துவேஷ் சூழ்ச்சிகளாலும் பொதுமக்கள் திசைத் திருப்பப்படும் போது ஒருமைப்பாடான ஆத்மார்த்த உள்ளுணர்வைப் பிரதிபலிக்கும் சின்னமாக அவன் விளங்குகிறான். முருகனின் அருமை பெருமைகளை விவரிக்கும் கதைகளும் பாக்களும் மற்றும் நயப்புறு நிகழ்ச்சிகளும் சிங்களத்தில் திறமைமிக்கோரால் மொழி பெயர்க்கப்படவேண்டும். கந்தரலங்காரம், கந்தரனுபூதி இரண்டுமாவது தக்க விளக்க விரிவுரைகளோடு சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு விரைவில் அச்சிட்டு விநியோகிக்கப் படவேண்டும். இரு பெரும் இனத்தவரின் தேசியத் தலைவனான முருகனின் புகழ்த்திறன் பரம்பரை அவையை மேலோங்கச் செய்யும்."

இவ்வாறு நாவலப்பிட்டி ஆதிமஜோதி நிலையத்தைச் சேர்ந்த திரு. சு. பிரேமசம்பு கப்புத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவ ஆறும் நாள் விழாவில் முருகனும் புலமையும் என்னும் தலைப்பில் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவில் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சிக்கு கப்புத்தளை கனிஷ்ட வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. பொ. சிவகுரு தலைமை தாங்கினார். திரு. சு. பிரேமசம்பு மேலும் தமது உரையில் கூறியதாவது:

முருகனுக்கும் புலமைக்கும் நிறைந்த தொடர்பு உண்டு முருகனே ஒரு புலவன். பிரமனைப் பிரணவப் பொருள் கேட்டு மடக்கினான் இறைவனுக்குப் பிரணவப் பொருள் விளக்கினான். அகத்தியருக்குத் தமிழிலக்கணம் பயிற்றினான். முருகன் புலமையோடு கூடியவன் மட்டுமல்லாது புலவர்களையும் ஆதரித்த பேரருளன்.

---

குருநகர்

### வீடமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

குருநகர் வீடமைப்புத் திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படுமென அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தெரிவித்துள்ளார். குருநகர் வீடமைப்புத் திட்டமே அவசியம் என்றும், தற்போது விளையாட்டுத் திடல் அவசியமில்லையென்றும், வீடமைப்புத் திட்டத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கும்படியும் திரு. ஜெ. செல்வநாயகம் அரசாங்க அதிபருக்கு அனுப்பியிருந்த கடிதத்திற்கு பதிலளிக்கையிலேயே இவ்விதம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. (நநி)

---

### தண்ணீர்க் கஷ்டம்

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்திலுள்ள மக்கள் தண்ணீர்க் கஷ்டத்தினால் மிகவும் அவதிப்படுகின்றனர். வரட்சி காரணமாக இங்குள்ள கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டன.


## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்




# வெஸ்லி சினிமா

(மானிப்பாய்)

**இன்று மாலை 2-30 காட்சியுடன் ஆரம்பமாகிறது!**

தினசரி 6-30, 9-30 மணிக்கும்
லீவு தினங்களில் 2-30 மணிக்கும்

ஒவ்வொரு குடும்பத்தவரும்
குடும்பத்துடன் பார்த்து
மகிழவேண்டிய ஓர் ஒப்பற்ற
குடும்பச் சித்திரம்!




**முக்கிய கவனிப்பு**

யாழ்ப்பாண ரசிகர்கள் 2-30, 6-30 காட்சிகள் பார்த்தபின் திரும்புவதற்கு பஸ் வசதிகள் உண்டு

அசோகன் — லீலாவதி
விஜயன் — வசந்தா
ராமதாஸ் — சகுந்தலா
வனமாலா — ஜெயந்தி

நடித்த



# கார்த்திகை தீபம்

(சலுகைகள், பாஸ்கள் ரத்து)

நவீன வசதிகளுடன்
அமைக்கப்பெற்ற எமது தியேட்டரின்
உள்தோற்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உத்தியோகம், சீதனம் இவைபற்றிதான் சிந்தனை"

## தமிழர் தாழ்வுறுவதற்கு வங்கி பிரமுகர் கூறும் காரணம்

உடுப்பிட்டி, செவ்

"எமது பிள்ளைகளின் எதிர்காலம் இருள் சூழ்ந்த காலமாகும். இதனையிட்டு எமது எம். பிக்களோ அரசியல் வாதிகளோ அல்லது பெரியோர்களோ அவர்கள் சிந்திக்கவில்லை எனக் குறை கூறுவது தவறு.

இவ்வாறு புலோலிமேற்கு சைவப்பிரகாச பாடசாலையின் பெற்றோர்தினவிழாவிலும், பரிசளிப்புவிழாவிலும் தலைமை வகித்து பேசுகையில் பருத்தித்துறை இலங்கை வங்கி அதிபர் திரு. வி. கே. கந்தப்பு கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழர்கள் எதிர்காலம் பற்றி சிந்திப்பதில்லை. தமிழ் வளர்ச்சி மத வளர்ச்சி, விவசாயமுன்னேற்றத்திலும் அவர்களுக்கு அக்கறையில்லை. அரசாங்க உத்தியோகம், சீதனம் ஆகியவைபற்றியே தமிழினம் சிந்தித்து தாழ்வடைந்துவருகின்றது. இந்நிலை நிலைமாறவேண்டுமாயின் ஆசிரியர்கள் மாணவர்கட்குப் புத்திமதிகள் சொல்ல வேண்டும். எமது கல்வித்திட்டம் ஆங்கிலேயர் காலத் திட்டமாகும். இத்திட்டம் பிரயோசனமற்றது. இனிமேலாவது நாம் விழிப்புணர்ச்சியுடன் விவசாயத்துறையில் அதிக நாட்டம் கொள்ளவேண்டும்"

திரு. வே. தங்கராசாவின் பக்திப்பாடலுடன் ஆரம்பமான இவ்விழாவில் காலஞ்சென்ற கவிஞர் திரு. வே. சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்) க்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இருநிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

பாடசாலைத் தலைமையாசிரியை திருமதி செல்லம்மா குமாரசாமி தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் இப்பாடசாலையின் கட்டிடத்தைத் திருத்தியமைக்கப்பெற்றோர் உதவிபுரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதன்பின்னர் பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு வ. சபாபதிப்பிள்ளை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் மாணவர்கள் அனைவருடனும் மரியாதையாகப் பழகவேண்டுமெனக் குறிப்பிட்டார். அவருக்கு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஓர் வாழ்த்துமடல் அன்பளிக்கப்பட்டது.

திருமதி சபாபதிப்பிள்ளை மாணவிகட்குப் பரிசில்களை வழங்கினார். பாடசாலையின் சகல திறமைகள் பரிசைச் செல்வி க. இருபாவதி பெற்றுக்கொண்டார். செல்வி ச. கருணாதேவியின் பரதநாட்டியமும் கலைக்கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

# "பொதுப் பல்கலைக்கழகத்தை உருவாக்க ஒன்றுபடுங்கள்"

## தமிழ் தலைவர்களுக்கு வேண்டுகோள்

உடுவில், செவ்வாய்

"பல்கலைக்கழகம் ஒன்று ஏற்பட எவரும் மறுப்பு டையவரல்லர். இன்றைய நிலையில் தமிழினம் சமூக அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. "இந்துப் பல்கலைக்கழகம்" என்று ஒரு பல்கலைக்கழகம் தமக்குள் உருவானால் அது தமிழ் பேசும் ஏனைய சமயத்தவர்களை புறக்கணிக்கும் செயலாக அமையும் இன்றைய அரசியல் நிலையில் தமிழினத்தை ஆளும் எந்த அரசியல் கட்சியும் "பிரித்தாளும்" நோக்கினையே குறிக்கோளாக கொண்டுள்ளது. சிறுபான்மை மக்கள் மத அடிப்படையில் அல்லது சாதி அடிப்படையில் பிரிக்கப்படுமாயின் தமிழ் இனம் தனது தற்போதைய பலத்தை முற்றாக இழக்கும் நிலை ஏற்படும்."

தாவடி இந்து வாலிபர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்துவாலிபர் சங்கத்தின் தலைவர் திரு. செ. இராசதுரை தலைமை வகிக்க நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். முத்துலிங்கம் மேலும் பேசுகையில், சாதி-மத வேறுபாட்டால் எமது இனத்தைப் பிரிக்க வழி கோலாமல் எல்லா சமய சமூகத்தவருக்கும் பொதுவான ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

---

# அண்டைவீட்டாருடன் சண்டை அதன்பின் இளைஞரைக்காணும்

## திருமலையில் பரபரப்பு

திருகோணமலை, செவ்.

இங்கு பிரபலமான சோதிடர் ஒருவரின் 16-வயதுபுதல்வனைக் காணவில்லை. கடந்த இரவு அண்டை வீட்டாருடன் ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்தே குலேந்திரன் வேலுப்பிள்ளை என்ற இந்த இளைஞர் காணாமல் போனதாகக் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக கூட்டுறவு இன்ஸ்பெக்டர் ஒருவரும் அவரது மனைவியும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். காணாமல் போன இளைஞர் பற்றிய தகவல் எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இரு குடும்பங்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வார்கள் என்றும், குலேந்திரன் காணாமல் போவதற்கு முன் கொடுமையாகத் தாக்கப்பட்டதாகவும்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# 11-ந் திகதி வழக்கு தாக்கல்

குரும்பசிட்டி, செவ்

அச்சுவேலி வாசியான எஸ். துரைராஜாவுப்பாக்கெட்டுடு சம்பந்தமாக பொலிசாரால் கைதுசெய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அன்னராசா, கணேசன், தங்கராசா ஆகிய மூவர் மீதும் கொலைக் குற்றம் சுமத்தி காங்கேசன்துறை பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் இம்மாதம் 11-ம் திகதி வழக்குத் தாக்கல் செய்வர்

சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்கான அடையாள அணிவகுப்பும் 11-ம் திகதி நடைபெறும். அதுவரை சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

---

# அவருக்கும் இந்தக் கதி?

யாழ்ப்பாணம், புதன்

தபாற்கந்தோரில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரது பதிவுத் தபால் அவரது விலாசம் தெரியாததால் தபாற் கந்தோருக்கே மீண்டும் சென்றடைந்ததாம்.

யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் தபாற் சேவகரும் திருநெல்வேலியைச் சேர்ந்தவருமான திரு. என். பாலசுப்பிரமணியம் என்பவருக்கு யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து அனுப்பப்பட்ட கடிதமே இவ்விதம் திரும்பியதாம்.

இது சம்பந்தமான விசாரணையை யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனராம். [கா. நி]

---

# இலவச வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலை உற்சவத்தை முன்னிட்டு 'மில்க் வைற் சோப்' ஸ்தாபனத்தார் 'கந்தர்சஷ்டி கவசம்' எனும் நூலை இலவசமாக அடியார்களுக்கு விநியோகிக்க விருக்கின்றனர். இவ்வித ஜீவன சங்க மண்டபத்தில் நாளை 10-ம் திருவிழா தொடக்கம் விநியோகம் நடைபெறும்.

---

# தமிழர் கலை ஆர்வம்

உடுவில், செவ்.

"தமிழ் மக்கள் கலை ஆர்வம் மிக்கவர்கள். இன்று இலங்கைத் தமிழர் உரிமையற்று விடுதலையற்று நிற்கின்ற போதிலும் தமது கலை, கலாசாரத்தை பேணுவதிலும், வளர்ப்பதிலும் முன்னிற்கிறார்கள்"

இணுவிலில் நடைபெற்ற "சம்பூர்ண அரிச்சந்திரா" என்ற நாடகத்துக்கு தலைமை வகித்துப் பேசிய உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

---

# கதிர்காம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுகையிட்டுவிட்டதனால் மரநிழல்களிலும், ஆற்றங்கரைகளிலும் கூட்டம் கூட்டமாகக் குடிக்கொண்டிருக்கிறார்கள்.

வரும் 9-ந் திகதி புனித மாணிக்க கங்கையில் சுவாமி தீர்த்தமாடுவார்.

'டுவிஸ்ட்' காவடி

கதிர்காமத்தில் தமது நேர்த்திக்கடனைச் செலுத்த நூற்றுக்கணக்கானோர் காவடி எடுக்கின்றனர் [illegible] 'டுவிஸ்ட்' என்று கூறப்படும் நடனக்காவடி

---

# மயிலிட்டி மீனவர் விருப்பம் விரைவில் நிறைவேறும்

காங்கேசன்துறை, செவ்

பல வருடகாலமாக மயிலிட்டியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று மயிலிட்டி கிராம முன்னேற்றச் சங்கம் கோரியதற்கிணங்க விரைவில் கட்டட வேலையை ஆரம்பிக்க பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினர் மேற்கொள்ளவிருப்பதாக கைத்தொழில் மீன்பிடி அமைச்சரும் மீன்பிடி பொதுக் கூட்டுறவு முகாமையாளரும் மயிலிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மூன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இம் மீன்பிடித் துறைமுகம் சுமார் 200 வள்ளங்கள் கட்டக் கூடியதாகவிருக்குமென மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். இம்மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்பட்டதும் இங்குள்ள கடற்றொழிலாளர்கள் ஊர்காவற்றுறை, தொண்டமானாறு ஆகிய இடங்களுக்கு சென்று இயந்திர வள்ளங்கள் கட்ட வேண்டிய நிலை ஏற்படாதென தெரியவருகிறது.

---

## போலியோ தடுப்பு இயக்கம்

கொழும்பு, செவ்.

நாட்டின் சகல மாவட்டத்திலும் இளம்பிள்ளைவாதத் தடுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இளம்பிள்ளை வாதநோய் நாட்டின் பல பகுதிகளிலும் பீடித்துள்ளதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது.

## புதிய கமிஷனர்

நல்லூர், திங்கள்

ஓய்வுபெற்ற உதவிப் போஸ்மாஸ்டர் ஜெனரல் திரு. ஏ. பேரம்பலம், யாழ்ப்பாணம் மாநகரசபையின் கமிஷனராகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது. இம்மாதம் 15-ம் தேதி இவர் கடமையைப் பொறுப்பேற்பார் என்றும் தெரிய வருகிறது.

---

## ஆலயப் பிரவேச...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

என தேசிய அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தொண்டர் சபை, ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஏற்ற நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்வதற்கெனக் கூட்டப்பட்ட விசேஷ கூட்டத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் திரு. எஸ். யோகேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு கோவிலை அடுத்துள்ள அயற்கிராமங்களிலிருந்து ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

"மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச விஷயத்தில் மௌனம் சாதித்த காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1-7-68 முதல் இன்றுவரை இப்புனித ஸ்தலத்தில் நடைபெற்றுள்ள சம்பவங்களை நேரில் வந்து பார்த்துக் கடமை செய்யத் தவறிவிட்டார். இன்ற பத்திரிகை மூலம் கோவில் குருக்கள் கதவுகளைப் பூட்டிவைத்தது பாவச்செயலென்று அறிக்கைவிடுத்தது சைவசமயிகளின் மனதைப் பெரிதும் புண்படுத்துகின்றது. இதனால் சைவமக்கள் காங்கேசன்துறைப் பிரதிநிதி மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள். எனவே திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது எம். பி. பதவியை உடனடியாக ராஜினாமா செய்யவேண்டும். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தில் பாரதூரமான திருத்தங்களை அரசாங்கம் செய்ய முனையும் வேளையில் சைவ மக்களின் எண்ணங்களை ஆட்சிமன்றத்தில் வெளிப்படுத்தத்தக்கவொரு சைவப் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் ராஜினாமா பெரிதும் உதவியாயிருக்குமெனக் கருதுகிறோம். மற்றும் சமூகக்குறைபாடு ஒழிப்புச் சட்டமூலம்

[5-ம் பக்கம் பார்க்க]

---

## ஜாதிக சம்பத்த 2-வது சீட்டிழுப்பு

கொழும்பு, புதன்

ஜாதிக சம்பத்த 2-வது சீட்டிழுப்புக்களுக்கான டிக்கெட்டுகள் இன்று முதல் விற்பனையாகும். இன்று முதலாவது டிக்கெட்டை கண்டி விவசாய மன்னன் கண்டி எம். பி. டி. சி, சுகாதார அமைச்சருமான திரு ஈ. எல். சேனநாயக்காவுக்கு விற்பனை செய்வார்.

---

## மந்திரி 'திரு' இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார். கிளிநொச்சி பட்டினசபைத் தலைவர், உபதலைவர் வரவேற்புக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வதற்காகவே இவர் இன்று வருகின்றார். (ந. நி)

---

## பஸ்சேவை

காங்கேசன்துறை, செவ்.

யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுவன் ஊடாக மயிலிட்டி செல்லும் பஸ்சேவை இரண்டு கிழமையாக மோசமான நிலையில் இயங்கி வருகிறதாகவும் பிரயாணிகள் நேரத்திற்கு சாத்தா நிற்பதைக் கைவிட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

இதுபற்றி மேலிடத்திற்கு பொதுமக்கள் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

---

## நாடும் நடப்பும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் குரக்கன் பிட்டுக்கும் சபாஷ் போட்டுச் சென்றார்.

நல்லெண்ணெயும் மாம்பழமும் குரக்கனும் மற்றுப் பல பொருள்களும் வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் 'மவுசு' தேடித்தரக் கூடியவை. நமது அமைச்சர்கள் மனம் வைக்கவேண்டும்

—ஊர்சுற்றி

---

## இடிபாடு......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கிடையில் கிடக்க வேண்டுமெனத் தெரிகிறது.

இந்த 5 மாடிக்கட்டிடத்தின் நிர்மாண வேலைகளில் உள்ள குறைபாடுகளை விசாரித்தறியுமாறு பிரிவின் பொலிஸ் அதிபர் திரு. மார்க்கோ உத்தரவிட்

---

## மரண அறிவித்தல்

திரு. விஜயரத்தினம் லண்டனில் காலமாகிவிட்டார். Dr. ஞானேஸ்வரியின் அருமை கணவரும், திரு, திருமதி C. கந்தையாவின் மகனும், திரு, திருமதி R. செல்லையா "சொர்ண" வாசா, கொக்குவில் மேற்கு ஆகியோரின் மருமகனுமாவார். சமக்கிரியைகள் 8-8-68 பி. ப. 3 மணிக்கு 23, ஆம்மன் ரோட், கந்தர்மடம் என்ற விலாசத்தில் நடைபெறும்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] சகம் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org